DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பீர் முகைதீன் |
| Father Name | : | லேட். கோதர் முகைதீன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2025.

(3 வது எதிரி இறந்துவிட்டார். 2, 4 மற்றும் 5 எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை, 1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது காவல் கூடுதல் துணை ஆணையராக மதுரை மாநகரத்தில் பணிபுரிந்து தன் சுய விருப்ப ஓய்வில் கடந்த 12.09.2023 முதல் இருந்து வருகிறேன். கடந்த 03.01.2016 ம் தேதி திலகர் திடல் காவல் உதவி ஆணையர் சட்டம் ஒழுங்கு பிரிவில் பணிபுரிந்த போது, அன்றைய தினம் நடந்த வீரபாண்டிய கட்டபொம்மன் 257 வது பிறந்தநாளை முன்னிட்டு ஜெயந்தி விழா பாதுகாப்பில் காலை 8 மணி முதல் பாதுகாப்பு பணியில் இருந்து வந்தேன். என்னுடன் அப்போதைய தல்லாகுளம் போக்குவரத்து பிரிவு உதவி ஆணையர் **அ.சா.2** திரு.திருமலைக்குமார் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் **சாட்சி எண்.4** ரவிச்சந்திரன் அவர்கள் நுண்ணறிவு பிரிவு தலைமை காவலர் 308 **அ.சா.1** திரு.பாண்டிச்சாமி மற்றும் பாதுகாப்பு பணியில் மற்ற காவலர்களுடன் பணியில் இருந்து வந்தேன். அன்றைய தினத்தில் சுமார் 13.15 மணிக்கு பழந்தமிழர் கட்சியை சேர்ந்த மாநில பொதுச்செயலாளர் அவர்களும் அவர்களுடன் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த கணேசன், நாராயணன்,

மதுரைவீரபோயன் மற்றும் சில நபர்களும் காவல் துறை ஆணையர் அவர்கள் தடை உத்தரவை மீறி TN 65 E 2325 என்ற டாடா சுமோ காரில் கட்டபொம்மன் சிலையை நோக்கி தடை உத்தரவை மீறி ஜெயந்தி விழாவிற்கு வருபவர்களை தலைமை காவலர் 308 வீடியோகிராபர் அ.சா.1 அவர்கள் வீடியோ எடுத்தார். அப்போது வாகனத்தில் வந்தவர்கள் டேய், போலிஸ் தேவுடியா பசங்களா போன்ற கெட்ட வார்த்தைகளால் உங்க வேலைய ஒழுங்கா பாருங்கடா, எங்கள ஏன்டா வீடியோ எடுக்குறீங்க என்று பொது இடத்தில் பாதுகாப்பு பணியிலிருந்த எங்களை பார்த்து ஒருமையில் பேசினார்கள். அப்போது தன் பணியை செய்துகொண்டிருந்த நுண்ணறிவு பிரிவை சேர்ந்த வீடியோகிராபர் தலைமை காவலர் 308 அ.சா.1 திரு.பாண்டிச்சாமி அவர்களை மேற்படி மூன்று பேரும் கைககளால் மாறி மாறி வலது கன்னத்திலும் உடம்பிலும் அடித்து ரத்தக்காயங்களையும் ஊமைக்காயங்களையும் ஏற்படுத்தி வீடியோ கேமராவை பறிக்க முயன்றனர். ஆனால் அதை மேற்படி வீடியோகிராபர் எவ்வளவோ முயன்று தடுத்தும், விடாமல் வீடியோ கேமராவை பிடுங்கி கீழே வீசி உடைத்தனர். இந்த சூழ்நிலையில் பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த எதிரிகள் மணிகண்டன், சக்திவேல், கணேசன் ஆகியோர்கள் போலிஸ்காரங்க இதுக்கெல்லாம் பயப்பட மாட்டாங்க, அவன் கை காலை உடைங்கடா என்று சத்தம் போட்டு கீழே கிடந்த கல்லை எடுத்து பாதுகாப்பு பணியிலிருந்த எங்கள் மீதும் எங்களுடன் இருந்த காவலர்கள் மீதும் வீசினர். இதனால் எனக்கு வலது முன்னங்கையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. என்னுடன் பணியாற்றிய உதவி ஆணையர் அ.சா.2 திருமலைக்குமார் அவர்களுக்கும் சிறப்பு உதவி ஆய்வாளர் சாட்சி எண்.4 ரவிச்சந்திரன் அவர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டது. இந்த சூழ்நிலையில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க வேண்டி குறைந்த பலத்தைக்கொண்டு சட்டவிரோதமாக கூடி நின்று பிரச்சனை செய்தவர்களை மட்டும் பொதுநலன் கருதி பொது அமைதி கருதி கலைக்க நேரிட்டது. உடனே மேற்படி எதிரிகளை முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக என்னுடன்

பாதுகாப்பு பணியில் இருந்த காவல் ஆளிநர்கள் மற்றும் காவல் அதிகாரிகளுடைய துணையுடன் மேற்படி எதிரிகளை கைது செய்தேன். அதில் 3 வது எதிரி வீரபோயன் தப்பி ஓடிவிட்டார். காயம்பட்ட வீடியோகிராபர் தலைமை காவலர் 308 அ.சா.1 மற்றும் கைது செய்யப்பட்ட எதிரிகளையும் போலிஸ் வாகனத்தில் திடீர் நகர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தோம். நான் முதலுதவி சிகிச்சை பெற அருகில் உள்ள குவாலிட்டி கேர் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன். திடீர் நகர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

03.01.2016 ம் தேதி நானும் மதுரை பெரியார் பஸ் ஸ்டான்ட் அருகிலுள்ள கட்டபொம்மன் சிலைக்கு அருகில் பாதுகாப்பு பணியில் இருந்தேன். சம்பவ தினத்தன்று அந்த இடத்தில் யாரும் அவசியமின்றி கூட்டம் சேரக்கூடாது என்று மதுரை காவல் ஆணையாளர் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருந்தார் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று அங்கு சுமார் 200 நபர்கள் கூடியிருந்தார்கள் என்றால் ஒவ்வொரு இயக்கத்தை சேர்ந்தவர்களும் அவரவர்கள் ஜெயந்தி விழாவிற்கு வந்து கட்டபொம்மன் சிலைக்கு மாலை அணிவித்து பின் கிளம்பி சென்றுவிடுவார்கள். சம்பவ தினத்தன்று கூட்டம் கூடி கட்டபொம்மன் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல, வாகனங்கள் அங்கு வருவதற்கும் சட்டவிரோதமாக கூட்டம் சேர்வதற்கு மட்டும் தான் தடை விதிக்கப்பட்டிருந்தது. மேற்படி கட்டபொம்மன் சிலைக்கு மாலை அணிவிப்பதற்கு காவல்துறையினரிடம் முன் அனுமதி பெற்று தான் வர வேண்டும் என்றால் சரிதான். சம்பவ தேதியன்று சட்டம் ஒழுங்கு பிரச்சனையை எத்தனை நபர்கள் ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவ தினத்தன்று எதிரிகளை தவிர வேறு நபர்களும் சம்பவயிடத்திலிருந்து கலைக்கப்பட்டார்கள் என்றால் ஜெயந்தி விழாவிற்கு

இடையூறு செய்த நபர்கள் மட்டும் கலைக்கப்பட்டார்கள். மேற்படி இடையூறு செய்த நபர்களை இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும், அவர்களை இந்த வழக்கில் சேர்க்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். அ.சா.1 யை எந்த எதிரி தாக்கினார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. அது போல் டாடா சுமோ காரிலிருந்து தான் எதிரிகள் வந்தார்கள் என்பதை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். எந்தெந்த எதிரி காரின் எந்ததெந்த கதவிலிருந்து இறங்கினார்கள் என்பதை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எதிரிகள் டாடா சுமோ காரில் வரவில்லை என்றும், அங்கு நின்றிருந்த மக்களை பிடித்துக்கொண்டு போய் வழக்கிற்காக பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட புகார் கொடுக்கும் போது நான் உடனிருக்கவில்லை. நான் குவாலிட்டி கேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது தொடர்பான ஆவணங்களை நான் புலன் விசாரணை அதிகரியிடம் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு எந்த சிகிச்சையும் எடுக்கவில்லை என்றும், அப்படி சிகிச்சை பெற்றிருந்தால் அந்த ஆவணங்களை வழக்கு கோப்பில் சேர்த்திருப்பேன் என்றும், அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் தனியாக சென்று உள் நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தேன். நான் காவல் நிலையத்திலிருந்து எந்தவித நமுனாவும் பெறாமல் தன் மேற்படி அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தேன். மற்ற சாட்சிகள் சிகிச்சை பெற்ற விவரம் குறித்து பிறகு கேட்டு தெரிந்துகொண்டேன். நான் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றும், நான், அ.சா.1, அ.சா.2 மற்றும் சாட்சி எண்.4 ஆகியோர்கள் ஒரே நேரத்தில் 03.01.2016 ம் தேதியில் அடுத்தடுத்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு தற்போது வழக்கிற்காக நான் தனிப்பட்ட முறையிலும் அவர்கள் தனிப்பட்ட முறையிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக

பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எடுத்ததாக சொல்லப்படும் வீடியோ பதிவுகளை ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது புலன் விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும். இந்த வழக்கானது சட்டப்பிரிவு 188 இதச–ல் வழக்கு பதிவு செய்யப்படும் போது குவிமுச பிரிவு 195(a)(i) ன்படி அனுமதி பெற்று புகார் தாக்கல் செய்து வழக்கு பதியப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் குறிப்பிடுவது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அந்த நேரத்தில் கிடைத்த நபர்களைக்கொண்டு இந்த வழக்கை பொய்யாக புனைந்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை –**</u> இல்லை.